ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

26.12.2024

1. சோதி நிலை கண்டு அரங்கன் யான்
சுப்பிரமண்யராய் என் மக்களுக்கு
விதிவெல்லும் வல்லமைதனை அருளிட
வென்றேன் என மக்களெல்லாம் அமைதி

2. அமைதி பாதுகாப்புடன் மகிழ்வுற
ஆனந்தமாய் குரோதி சிலை திங்கள்
நேமமுடன் இரண்டாம் குருவார அருளாசி
நிலமதனில் அரங்கனும் உரைப்பேன்

3. உரைக்கவே வளம் காண வேண்டி
உயர் வரங்கள் பல தருவேன்
குறைவிலா குருவாரம் தோறும்
குருவரங்கன் என் தடம் அணுகி

4. அணுகியே குருபூசை கலந்து
ஆத்மார்த்த சோதி வழிபாடு
ஞான பூசையாகச் செய்து
நம்பிக்கை வைத்து உங்களின்

5. உங்களின் கட்டங்கள் தீரவே
உள்ளுள்ளே சங்கல்பம் வைக்க
தங்கு தடையின்றி அரங்கன் யான்
தானுங்கள் கோரிக்கையாக ஏற்று

6. ஏற்றுமே வேண்டல்கள் யாவும்
இனிதே நிறைவேற்றி காப்பேன்
மாற்றம் தரும் வண்ணம் அற்புதமும்
மகான் அரங்கன் யானும் வாழ்வில்

7. வாழ்வில் மக்களெல்லாம் அடைய
வரமாக வழங்கி நிற்பேன்
ஊழ் அறுத்து உங்கள் வாழ்வில்
உயர்வும் நன்மையும் தருவேன்

8. தருகவே அருள் பொருள் வளம்
தவராஜன் என் அருளால்
வருவோரெல்லாம் அடைந்திடுவர்
வணங்கியே பிரணவ குடில் தன்னில்

9. தன்னிலே சரணாகதி கொண்டு
தருமவழி தானாகப் பொருளுதவி
அண்ணலேயென அணுகிச் செய்திட
அவரவரும் ஆபத்துக் கண்டமிலா

10. கண்டமிலாப் பெருவாழ்வு கண்டு
கலியினில் பாதுகாப்புமிக்க என்
தொண்டர்களாக ஞானவான்களாக
தேறியே மேல்நிலை அடைவர்

11. அடைவரே ஆறுமுகப் பெருமானின்
அளவிலா ஆசி காட்சியும்
அடைந்துமே ஞானிகள் ஆவர்
அருளிய அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி